# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணகூட்டம்** 29-12-2025 **திங்கள்கிழமை காலை** 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. தாங்கள் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) 4-வது வார்டில் கலையன்குளம் பிளஸ்ஸிங் நகர் முதல் கோணத்துவிளை வரை ரோடு போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மானம் எண் 1611 தீர்மானிக்கப்பட்டது

4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.C. லலிதா கொண்டு வரும் தீர்மானம்

1) இடைவிளாகம் சாணான்விளை ராஜு வீடு முதல் இடைவிளாகம் சந்திப்பு வரை மழைநீர் ஓடை மண் நிரம்பியும், சில இடங்களில் பக்க சுவர் இடிந்தும் உள்ளது. இதை சரி செய்ய மன்றம் தீர்மானிக்க

மன்றத்தீர்மானம் எண் 1612 தீர்மானிக்கப்பட்டது

5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.S. ஆட்லின் கெனில் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சி நீதிமன்றத்தின் பின்புறம் ரேஷன் கடை அருகில் இருந்து கோவில் வீடு வரை மழைநீர் வடிகால் சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மானம் எண் 1613 தீர்மானிக்கப்பட்டது

6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.V. விஜு கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை பெண்டுகடவு பகுதியில் பழைய ஜெனரேட்டர் அறை பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. அதை சரிசெய்து இறந்தவர்களின் ஈமச்சடங்கு செய்வதற்கு வசதியாக புனரமைப்பு செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மானம் எண் 1614 தீர்மானிக்கப்பட்டது

<u>7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.உ.ரா.விஜயலெஷ்மி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) வார்டு எண் 7-ல் நீதிமன்றத்தின் பின்புறம் சாய்கிருஷ்ணா பள்ளி அருகில் இருந்து ராமச்சந்திரன் அவர்களின் வீடு வரை மழைநீர் வடிகால் சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

மன்றத்தீர்மானம் எண் 1615 தீர்மானிக்கப்பட்டது

<u>12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கி.செ.ஜீலியட் மெர்லின் ரூத் கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) குழித்துறை நகராட்சி வார்டு 12-ல் கண்ணக்கோடு பழைய ரேஷன் கடை அருகில் இருந்து புதிய ரேஷன் கடை வரை உள்ள மழைநீர் ஓடையை சரிசெய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மானம் எண் 1616 தீர்மானிக்கப்பட்டது

<u>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ. லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) குழித்துறை நகராட்சியில் வார்டு.14-ல் காமானாட்டுவிளையில் இருந்து வாத்தியாக்குடி வரை உள்ள ஓடையை சரி செய்து மூடி போட மன்றம் தீர்மானிக்கலாம்

மன்றத்தீர்மானம் எண் 1617 தீர்மானிக்கப்பட்டது

<u>16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.கு.இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) வார்டு.16-ல் கீழ்பம்மம் பொற்றவிளாகம் பகுதியில் வழிப்பாதையில் ஆதிஷ் அவர்கள் வீட்டின் பாதைக்கு இடையூறாக உள்ள மின்கம்பம் மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மானம் எண் 1618 தீர்மானிக்கப்பட்டது

2) கொடுங்குளம் சாலையில் உள்ள கொல்லகுளத்தில் பக்கசுவர் பழுதடைந்துள்ளது. அதை சரிசெய்து தடுப்புவேலி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

மன்றத்தீர்மானம் எண் 1619 தீர்மானிக்கப்பட்டது

17-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.அ. அருள்ராஜ் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சி 17-வது வார்டில் வடக்கு தெரு லெட்சுமி விலாஸ் பேக்கரி அருகில் இருந்து பந்நியணி சாலை முடியும் வரை மழைநீர் வடிகால் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

மன்றத்தீர்மானம் எண் 1620 தீர்மானிக்கப்பட்டது

21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி கொண்டு வரும் தீர்மானம்

1) வார்டு 21-ல் மெயின் ரோட்டில் இருந்து சிறிய காட்டுவிளை செல்லும் பாதையில் மனோன்மணி என்பவர் வீட்டின் முன்பு இருக்கும் மின்கம்பம் மற்றும் ரசல் என்பவர் வீட்டின் முன்பு உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மானம் எண் 1621தீர்மானிக்கப்பட்டது

2) பம்மம் மெயின்ரோட்டில் இருந்து பால்பண்ணை வரை செல்லும் குடிநீர் விநியோகம் பைப் பல ஆண்டுகளுக்கு முன்பு பதிக்கப்பட்ட இரும்பு குழாய் ஆகும் அது பழுதடைந்துள்ளதால் அதை மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
மன்றத்தீர்மானம் எண் 1622 தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குழித்துறை கல்பாலத்தடி கட்டண கழிப்பறைக்கான மறுஏலம் / மறுஒப்பந்தபுள்ளியானது 28-10-2025 அன்று நடைபெற்றதில் கீழ் கண்டுள்ளவாறு ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | C. ராஜமணி<br>S/O. செல்லப்பன் | ரூ.13,050/- |

மேற்படி பெறப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அ.கு.:- கல்பாலத்தடி கட்டண கழிப்பறைக்கு பல முறை ஏலம்/ ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்ட காரணத்தினாலும் வேறு எவரும் இவ்வினத்தினை குத்தகைக்கு எடுக்க முன்வராததாலும் மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.3066/2021/அ2

மன்றத்தீர்மானம் எண் 1623 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனுசாமி வணிகவளாகத்தின் தென்மேற்கு பகுதி தேங்காய்பட்டணம் சாலையை ஒட்டி புல எண்.C4/44-ல் காலியாக உள்ள 8 x 10 = 80 சதுர அடி காலி இடத்திற்கான ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 28-10-2025 அன்று நடைபெற்றதில்கீழ் கண்டுள்ளவாறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் / முகவரி | ஏலத்தொகை மாத வாடகை | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | பி. பெல்பர்ட்ஜேஸ், கண்ணக்கோடு | - | - |
| 2 | எ. ராஜசேகர், பந்தல்விளை | 6500 | - |
| 3 | பிரபுசிங் K.H., த/பெ.சி. குமாரதாஸ் | 8000 | 37300 |
| 4 | S. வினோ, த/பெ.டி. சுந்தரம் | 7000 | 33700 |
| 5 | W.Y. ஷாஜிலால், த/பெ. வில்லியம் | 3750 | 9190 |

வரப்பெற்ற ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி தொகையாக மாதவாடகை ரூ.37300/- தெரிவித்துள்ள பிரபுசிங் K.H. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1079/2025/அ2.

மன்றத்தீர்மானம் எண் 1624 தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்.3

நகராட்சி பள்ளி மேம்பாட்டு மானியத்தின்கீழ் அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.9733/2025/SS2 நாள்:10-09-2025-ன்படி குழித்துறை நகராட்சியின் வார்டு எண்.9-ல் விளவங்கோடு பள்ளியில் புதியதாக அங்கன்வாடி அமைக்கும் பணிக்கு ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 08-10-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்புநோக்கு பட்டியலின் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. P.ஜெயசந்திரன் | 10.00% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.D. ஜஸ்டின் குமார் | 14.75% மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | திரு. K.கோபுகுமார் | 8.75% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 14.75% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.D. ஜஸ்டின் குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:- மன்றம் முடிவு செய்யலாம்
கோப்பு எண்.2595/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1625

10- வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று தவறுதலாக உள்ள வார்டு எண்ணை மாற்றி சரி செய்து அடுத்த மன்ற கூட்டத்தில் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண்.4</u>

நகராட்சி பள்ளி மேம்பாட்டு மானியத்தின்கீழ் அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 9732/2025/SS2 நாள்:10-09-2025-ன்படி குழித்துறை நகராட்சியின் வார்டு எண்.12-ல் வெட்டுமணியில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தின் பராமரிப்பு பணிக்கு ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 08-10-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்புநோக்கு பட்டியலின் விவரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திருமதி.P. சரோஜா | 19.20% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 10.00% மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | திரு.P. தேவதாஸ் | 11.98% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 19.20% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.P. சரோஜா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:- மன்றம் முடிவு செய்யலாம்
கோப்பு எண்:2595/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1626 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தை கடை எண்.1 முதல் 35 வரையிலான கடைகளுக்கான ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியானது 10-10-2025 அன்று நடைபெற்றதில் அதற்கு தேவையான Sound System, Speaker, Mic போன்ற ஏற்பாடுகள் Nishanth Sounds, Marthandam என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட வகைக்கு செலவினத்தொகை ரூ.5000/- Nishanth Sounds என்ற நிறுவனத்திற்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்
கோப்பு எண்: 2631/2025/அ2

மன்றத்தீர்மானம் எண் 1627 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் புதிய காய்கறி சந்தையில் கட்டப்பட்டுள்ள கடைகளில் இடஒதுக்கீடு கோரியும் வைப்புத்தொகை குறைப்பது தொடர்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் WP(MD)No.32870/2025-ன்படி இந்நகராட்சி ஆணையாளர் மீது தொடரப்பட்ட வழக்கிற்க்கு வாதாடிய வகைக்கு தொகை ரூ.10,000/-யினை மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. ஆதிமூல பாண்டியன் அவர்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்:2631/2025/அ2

மன்றத்தீர்மானம் எண் 1628 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்புவாகனம் எண்.TN75L0828-க்கு பழுதுகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் JALS AUTOMOBILES மூலம் மேற்கொண்ட வகைக்கு செலவின தொகை ரூ.12654/- வரப்பட்டுள்ளது . எனவே மேற்கண்ட தொகையினை JALS AUTOMOBILES என்ற நிறுவனத்திற்கு பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண்: 1002/2018/இ1

மன்றத்தீர்மானம் எண் 1629 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சி அலுவலக வாகனம் எண் TN75AZ2768-க்கு Wheel Alignment, Wheel Balancing, Tyre puncture பழுதுகள் மார்த்தாண்டம் தேவதாஸ் டயர் ஏஜென்சில் மூலம் சரி செய்யப்பட்டு அதற்கான செலவின தொகை ரூ.1794/- ஓட்டுநர் திரு.த.சுந்தர்சிங் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண்: 1247/2022/இ1

மன்றத்தீர்மானம் எண் 1630 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சியின் தட்டச்சர் பணி காலியாக உள்ளதாலும் ஒப்பந்ததாரர் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினசரி ஊதியம் ரூ.730/- வீதம் பணிபுரிய ஒரு நபருக்கு தீர்மான எண்.1070, நாள் 29-11-2024 ஒருவருட காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் நிர்வாக காரணங்களால் கூடுதலாக ஒரு நபர் நியமனம் செய்திட அதே ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தில் அதே ஒப்பந்ததாரருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண்:2781/2024/இ1

மன்றத்தீர்மானம் எண் 1631 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் பெறப்படும் மக்கும் கழிவுகள், பேம்பஸ் மற்றும் நாப்கின்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் MCC பகுதியை சுற்றியும் குடியிருப்புகள் அதிகமாக உள்ளதால் தேக்கி வைக்கவோ அல்லது புகைக்கவோ இயலாது.எனவே பொதுமக்களின் நலன் கருதி 500 கிலோ கொண்ட எடைக்கான Incinerator வாங்கிட மதிப்பீடு தொகை ரூ. 12.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: 123/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1632 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சியில் மின்கம்பியாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்ற திரு.எல். ஜாண்சன் என்பவர் ஓய்வூதியம் கோரி நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண்.W.P.,(MD) No.22300/2025க்கான வழக்கினை நடத்தியதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- திரு.பி. ஆதிமூலப்பாண்டியன், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞருக்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண்:923/2023/சி1

மன்றத்தீர்மானம் எண் 1633 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பணியாற்றி வரும் தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி டாக்டர்.வெ. ஆறுச்சாமி அவர்களின் ஆய்வு கூட்டம் 09-12-2025 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மேலும் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்ட பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு பந்தல் அமைத்தல், உணவு வழங்குதல் மற்றும் இதர செலவீனங்களுக்கு ரூ.50,615/-யினை திரு. ர.ராஜேஷ், சுகாதார ஆய்வாளரால் செலவு செய்யப்பட்டது. எனவே உரிய தொகையை மேற்படி பணியாளருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்: 5107/2025/எச்1

மன்றத்தீர்மானம் எண் 1634அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.13</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள Cross Cutter, Fogging மற்றும் spray Vehicle Machine பயன்படுத்தி இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 3 மிஷின்கள் அவ்வப்போது பழுது ஏற்படுவதால் அதனை சரி செய்வதற்கு வருடாந்திர பராமரிப்புக்காக செலவீனம் தொகை ரூ.1,25,000/-

யினை பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்: 5317/2025/எச்1
மன்றத்தீர்மானம் எண் 1635 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடியிருப்பு பயன்பாடு, வணிகம் பயன்பாடு மற்றும் தொழில் நிறுவனங்கள் பயன்பாட்டிற்கான 2025-2026 இரண்டாம் அரையாண்டு சொத்துவரியை 31-10-2025-ம் தேதிக்குள் செலுத்துபவர்களுக்கு 5% ஊக்கத்தொகை வழங்கப்படும் என தினசரி நாளிதழில் விளம்பரம்த செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் காணொலி ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை விபரப்படி கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) தினகரன் - 6,249/-

எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்:706/2024/அ1.
மன்றத்தீர்மானம் எண் 1636 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சியில் மார்த்தாண்டம் பகுதியில் மேம்பாலத்திற்கு மேல்பக்கத்தில் புதிய மின்விளக்குகள் அமைப்பதற்கு ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மானம்.1430, நாள் 21-08-2025-ல் அனுமதி பெறப்பட்டு 04-11-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | 0.16% மதிப்பீட்டை விட குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | திரு. P. ஜெயபிரகாஷ் | 0.13% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.16% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயசந்திரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு: மன்றம் முடிவு செய்யலாம்
கோப்பு எண்:2572/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1637 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சியில் மார்த்தாண்டம் பகுதியில் மேம்பாலத்திற்கு கீழ்பக்கத்தில் புதிய மின்விளக்குகள் அமைப்பதற்கு ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மானம்.1427, நாள் 21-08-2025-ல் அனுமதி பெறப்பட்டு 04-11-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | 0.09% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. P. ஜெயபிரகாஷ் | 0.08% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.09% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயசந்திரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு: மன்றம் முடிவு செய்யலாம்
கோப்பு எண்:2573/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1638 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.7 மற்றும் 8-ல் CKP சாலை முதல் பெருந்தெரு மீன்சந்தை-2, இடைக்குளம் முதல் கல்லுகெட்டி-1 மழைநீர் வடிகாலில் Cover slab அமைக்க ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மானம்.1522, நாள் 06-10-2025-ல் அனுமதி பெறப்பட்டு 04-11-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.T.ராஜன் | 1.42% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருமதி. P. சரோஜா | 0.37% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.37% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி. P. சரோஜா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு: மன்றம் முடிவு செய்யலாம்

கோப்பு எண்:3571/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1639 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சியில் சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 10-12-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.ஆஸ்டின் G தாஸ் | 866.41% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு. D. ஜஸ்டின் குமார் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | திரு. D. பிரேம் குமார் | 1.54% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரபெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 1.54% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. D. பிரேம் குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண்:1306/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1640 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்கு மார்சல் நேசமணி அவர்களின் பெயரை சூட்ட தமிழக அரசை கேட்டு மன்ற தீர்மான எண். 1254(1) நாள். 25-04-2025-ன் படி தீர்மானிக்கப்பட்டது. அரசாணை நிலை எண். 454 நாள். 08-12-2025-ன்படி மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்கு மார்சல் நேசமணி அவர்களின் பெயரை சூட்ட நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்கு “மார்சல் நேசமணி பேருந்துநிலையம்” என பெயர் சூட்டிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்
கோப்பு எண்: 2386/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1641அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.20

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் நவீன காய்கறி சந்தைக்கு கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயரை சூட்ட தமிழக அரசை கேட்டு மன்ற தீர்மான எண். 1254(2) நாள். 25-04-2025-ன் படி தீர்மானிக்கப்பட்டது. அரசு முதன்மை செயலாளர். தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடித எண். 4655/ந.நி-5(2)/2025-1, நாள் 02-07-2025-ன் படி நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே நவீன காய்கறி சந்தைக்கு **“கலைஞர் கருணாநிதி நவீன காய்கறி சந்தை”** என பெயர் சூட்டிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்
கோப்பு எண்: 1318/2025/எப்1

மன்றத்தீர்மானம் எண் 1642 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.21</u>

குழித்துறை நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நவீன சந்தை கட்டும்பணி நடைபெற்று கொண்டியிருக்கிறது. சந்தை கட்டும் மையப்பகுதியில் IDSMT திட்டத்தின்கீழ் உள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படும் பணிக்கு ரூ.2.55 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மானம்.1355, நாள் 26-06-2025-ல் அனுமதி பெறப்பட்டு 19-11-2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் கீழ்கண்டவாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | M/S. ராஜ்கன்ஸ்ட்ரசன்ஸ் | 35.89% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.D. ஜஸ்டின்குமார் | 26.71% மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | J.P.R. Traders | 29.55% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரபெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் ராஜ்கன்ஸ்ட்ரசன்ஸ் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 35.89% குறைவாக உள்ளது. எனவே M/S. ராஜ்கன்ஸ்ட்ரசன்ஸ்க்கு பணி உத்தரவு வழங்கிடவும் இடித்து அப்புறப்படுத்தப்படும் பொருட்களில் உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் பொதுஏலம் விடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்:1791/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1643

நிராகரிக்கப்பட்டது. மேலும் வி.எல்.சி மண்டபம் இடித்த முறையை கடைபிடிக்க தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண்.22</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண்.TN75J8227-க்கு 2025-2026 ஆம் ஆண்டிற்க்கான தகுதி சான்று பெற்றிட அலுவலக கட்டிடம் இதர செலவுகள் கீழ்கண்டவாறு வரப் பெற்றுள்ளது.

1) RTO அலுவலக கட்டணம் = ரூ.1608/-
2) Speed Control , Name sticker,
   Air Check up, Side Writing, Greese = ரூ.6350/-

மொத்தம் = ரூ.7958/-

மேற்படி செலவின தொகை ரூ.7958/- ஓட்டுநர் திரு.N.விஜயகுமார் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை

நகராட்சி பொதுநிதியிலிருந்து அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்
கோப்பு எண்: 2778/2012/இ1

மன்றத்தீர்மானம் எண் 1644 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.23</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 குருசடி முதல் சிங்கிளேயர் தெரு-II வரை உள்ள சாலையை அகலப்படுத்தி மழைநீர் வடிகாலுக்கு கவர் சிலாப் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.60 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் முடிவு செய்யலாம்
கோப்பு எண்: 4911/2025/இ1

மன்றத்தீர்மானம் எண் 1645 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.24</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் அட்டக்குளம் ஒருவழிசாலையில் மழைநீர் வடிகால் ஓடைக்கு மூடி அமைத்து சாலையினை அகலப்படுத்தும் பணிக்கு பணிக்கு மதிப்பீடு ரூ.4.60 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
கோப்பு எண்.4912/2025/இ1.

மன்றத்தீர்மானம் எண் 1646 நிராகரிக்கப்பட்டது

<u>பொருள் எண்.25</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் புதிய காய்கறி சந்தையில் கட்டப்பட்டுள்ள கவுண்டர் கடைகள் C1 முதல் C81 வரை உள்ள கவுண்டர் கடைகளுக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண். 1440 நாள்:21-08-2025-ன் படி ஒவ்வொரு கடைகளுக்கும் வைப்புத்தொகை ரூ.1.00 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது மார்க்கெட் உள்பகுதியில் புதிதாக 5 கவுண்டர் கடைகள் கட்டப்பட்டுள்ளது எனவே புதிதாக கட்டப்பட்டுள்ள கவுண்டர் கடைகளுக்கும் ரூ.1.00 இலட்சம் வைப்புத்தொகை நிர்ணயம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்: 2316/2025/அ2

மன்றத்தீர்மானம் எண் 1647 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.26</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் புதிய தினசரி காய்கறி சந்தையில் கட்டப்பட்டுள்ள கடைகள் கீழ்கண்டவாறுயுள்ள நகர்மன்ற தீர்மானத்தின்படி ஏற்கனவே காய்கறி சந்தையில் வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வண்ணம் அவர்களின் கோரிக்கையை ஏற்று பின்வரும் கடைகளை ஒதுக்கீடு செய்ய மன்றம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது வருமாறு

| வ.எண். | தீர்மான எண், நாள் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கடைகளின் விபரம் | மொத்த கடைகள் |
|---|---|---|---|
| 1 | 1523, 29-10-2025 | C27 to C51 மற்றும் C64 to C81 | 43 |
| 2 | 1524, 29-10-2025 | C1 to C26 மற்றும் C52 to C63 | 38 |
| 3 | 1609, 29-10-2025 | 75 to 84 | 10 |
| 4 | 1610, 29-10-2025 | 38 to 45 மற்றும் 73,74 | 10 |

மதுரை உயர்நீதிமன்ற வழக்கு எண். WP(MD) 32870/2025 மற்றும் 25919/2025-ன் படி தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின்படி பொது ஏலம் விட உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதி எண்.316 பிரிவு 11-ன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வியாபாரிகளுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கடைகள் அனைத்திற்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம்தாரர் சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் கடையினை ஒதுக்கீடு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்: 2631/2025/அ2

மன்றத்தீர்மானம் எண் 1648

மார்த்தாண்டம் புதிய மார்க்கெட் கடைகள் சம்மந்தமாக மன்றத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டது.மேலும் நீதிமன்ற வழக்கு தொடர்பாக மேல்முறையீடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது

நகர்மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.